அதற்கான பணிகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 301, மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி ராமஜெயம், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

301—

புதிய கட்டடம்

***43915—திருமதி செல்வி ராமஜெயம்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புவனகிரி தொகுதி, புவனகிரி பேரூராட்சியிலுள்ள பயணியர் மாளிகைக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

புவனகிரி தொகுதி, புவனகிரி பேரூராட்சியில் உள்ள நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான பயணியர் மாளிகைக்குப் புதிய கட்டடம் கட்டும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி ராமஜெயம் அவர்கள்.*

முற்பகல் 10–10

திருமதி செல்வி ராமஜெயம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், எங்களுடைய குடும்ப குல தெய்வம், மாண்புமிகு புரட்சித் தலைவி, தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் இருக்கும் திசைநோக்கி வணங்குகிறேன். கும்பிட்ட கரங்கள் விலகும் முன்பே வரம் வழங்கும் அன்னையாக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விளங்குகிறார்கள். என்னுடைய தொகுதி மக்களுடைய நீண்ட நாள்*

கோரிக்கையான புவனகிரி கீரப்பாளையத்தை இணைக்கும் வெள்ளாற்றுப் பாலம் உயர்மட்டப் பாலமாகக் கட்டித் தரப்படும் என்று அறிவித்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய தொகுதி மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் கோடானுகோடி நன்றிகளை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன்.

புவனகிரி தொகுதி, புவனகிரி பேரூராட்சியில் அமைந்துள்ள பயணியர் மாளிகைக் கட்டடம் 1918 ஆம் ஆண்டு கட்டப்பட்டதாகும். இந்தக் கட்டடத்தின் சுவர்கள் அப்பொழுது செம்மண்ணால் கட்டப்பட்டதால், சுவர்களில் விரிசல் ஏற்பட்டுள்ளது. மேலும், மங்களூர் ஓடுகள் போடப்பட்டுள்ளதால், அவை பழுதடைந்து, புதுப்பிக்க இயலாத நிலையில், பழைய கட்டடமாக உள்ளது. மேலும், கடந்த காலத்தில் ஏற்பட்ட 'தானே' புயலால் கட்டடத்தின் மேற்கூரை ஓடுகளில் பெரும்பகுதி உடைந்து சேதமடைந்துள்ளதால், மழைக் காலங்களில் மழை நீர் ஒழுகி, கட்டடம் முழுவதும் நீர் தேங்கி நிற்கிறது. எனவே, இந்த பயணியர் மாளிகைக்குப் புதிய கட்டடம் கட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புவனகிரியில் தற்போதுள்ள நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான பயணியர் மாளிகை மிகப் பழமையானது. இதற்கு அருகிலேயே சிதம்பரம் மற்றும் குறிஞ்சிப்பாடி ஆகிய இரண்டு இடங்களிலுள்ள பயணியர் மாளிகைகள் நல்ல நிலையில் உள்ளன. ஆகவே, அருகில் இருக்கக்கூடிய அந்தப் பயணியர் மாளிகைகளில் சென்று தங்கிக் கொள்ளலாம். இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், புவனகிரியில் உள்ள பயணியர் மாளிகை பழமையானதாக இருக்கின்ற காரணத்தினால், பயணியர் எவரும் தங்க இயலாத நிலையில் உள்ளது என்றும், அந்தக் கட்டடம் 1918 ஆம் ஆண்டு செம்மண்ணால் கட்டப்பட்டுள்ளதால் விரிசல் இருக்கிறது என்றும் இங்கே கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். ஆதலால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு இதைக் கொண்டு சென்று, அங்கு புதிய பயணியர் மாளிகை

2014 ஆகஸ்ட் 1]

கட்டுவது குறித்து அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி ராமஜெயம் அவர்கள்.*

திருமதி செல்வி ராமஜெயம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பயணியர் மாளிகை புவனகிரி பேரூராட்சியின் மையப் பகுதியில் அமைந்துள்ளது. மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் விருந்தினர்கள் வருகின்றபொழுது தங்குவதற்குப் போதுமான இட வசதி அங்கு இல்லை. எனது தொகுதி மக்களுடைய இந்த நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று நிறைவேற்றித் தரப்படும் என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. க. பாலகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் ஒரு ஆன்மீக நகரம்; அங்கு பல்கலைக்கழகம் இருக்கிறது. இப்படி பல்வேறு முக்கியத்துவம் வாய்ந்த இந்த நகரத்தில் சுற்றுலா மாளிகை ஏதுமில்லை. அரசு உயர் அதிகாரிகள் மற்றும் மாண்புமிகு அமைச்சர்கள் அங்கு வரும்பொழுது, அரசு சுற்றுலா மாளிகை இல்லாத காரணத்தால் தங்குவதற்கு சிரமமாக உள்ளது. எனவே, சிதம்பரம் நகரத்தில் ஒரு Circuit House கட்டிக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 30 ஆண்டுகளுக்கு முன்பு நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகள் மற்றும் ஏனைய அரசு உயரதிகாரிகள், முக்கிய பிரமுகர்கள் அலுவல் காரணமாக சென்றபோது தனியார் தங்கும் விடுதிகள் போதுமான அளவில் இல்லாத காரணத்தினால், அவர்கள் தங்குவதற்கு ஏதுவாக நெடுஞ்சாலைத் துறை மூலமாக பயணியர் மாளிகைகள் கட்டப்பட்டன. இப்பொழுது எல்லா*

நகரங்களிலும் போதுமான அளவிற்குத் தங்கும் விடுதிகள் கட்டப்பட்டுள்ளன. இருப்பினும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சிதம்பரம் நகரத்திற்குப் புதிய பயணியர் மாளிகை வேண்டுமென்று கேட்டுள்ளார்கள். எனவே, அவரது கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான பார்வைக்குக் கொண்டு சென்று, நிதிநிலைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி அவர்கள்.*

திரு. வீ.பி. நாகைமாலி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்வேளூர் ஒரு தொகுதியாக இருப்பதாலும், வட்டத் தலைநகராக இருப்பதாலும், அங்கு ஒரு பயணியர் மாளிகை கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10-15

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கீழ்வேளூர் பகுதியில் புதிதாக ஒரு பயணியர் மாளிகை கட்ட வேண்டுமென்று இங்கே கேட்டிருக்கின்றார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த மூன்றாண்டு கால பொற்கால ஆட்சியில், 2011–2012 ஆம் ஆண்டில் 17 புதிய பயணியர் மாளிகைகளும், 2012–2013 ஆம் ஆண்டில் 7 புதிய பயணியர் மாளிகைகளும், 2013–2014 ஆம் ஆண்டில் 8 புதிய பயணியர் மாளிகைகளும், இந்த ஆண்டு ஐந்து பயணியர் மாளிகைகளும் என ஆக மொத்தம் 37 பயணியர் மாளிகைகள் கட்டுவதற்காக ஆணையிட்டிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

அதில் 28 பயணியர் மாளிகைகள் கட்டப்பட்டு தற்போது பயன்பாட்டில் இருக்கின்றன. எஞ்சியுள்ள பயணியர் மாளிகைகள் கட்டப்படவுள்ளன என்பதையும், இந்த ஆண்டு 5 பயணியர் மாளிகைகள் கட்டுவதற்கு அறிவிக்கப்பட்டிருக்கின்றது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். ஒவ்வோராண்டும் பகுதி இரண்டு

திட்டத்தின்கீழ் புதிய பயணியர் மாளிகை கட்டுவதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டுள்ள பகுதியை ஆய்வு செய்து, நிதிநிலைமைக்கேற்ப அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தினகரன் அவர்கள்.

திரு. க. தினகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சூலூர் தொகுதிக்குட்பட்ட சூலூர் பேரூராட்சியில் ஒரு பயணியர் மாளிகை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், புதிய சூலூர் தாலுகா பிரிக்கப்பட்டு, நான்கு வருடங்களுக்கு மேலாகியும் அந்தப் பகுதியில் பயணியர் மாளிகை இல்லையென்பதால், புதிதாக பயணியர் மாளிகை கட்டிக் கொடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சூலூர் பகுதி கோயம்புத்தூருக்கு அருகில் இருக்கின்றது. கோயம்புத்தூர் மாவட்டத்தில் தங்கும் விடுதிகள் ஏராளமாக இருக்கின்றன. அங்கு தங்கிக்கொள்ளலாம். இருப்பினும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தங்கள் பகுதி புதிய தாலுகாவாக உருவாக்கப்பட்டுள்ளதாக இங்கே கோடிட்டுக் காட்டியிருக்கின்றார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர் கேட்ட பகுதியில் பயணியர் மாளிகை கட்டுவது குறித்து ஆய்வுசெய்து, பரிசீலித்து அரசின் நிதிநிலைமைக்கேற்ப தங்கும் விடுதி கட்டப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. துரைக்கண்ணு அவர்கள்.

திரு. இரா. துரைக்கண்ணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். என்னுடைய பாபநாசம் தொகுதியில் உள்ள அம்மாப்பேட்டை ஒன்றியத்தில் இதுவரை பயணியர் மாளிகை

இல்லை. வேளாங்கண்ணி மற்றும் நாகூருக்குச் செல்கின்ற முக்கியமான சாலையில் அந்தப் பகுதி இருக்கின்றது. ஆகவே, பொது மக்கள் நலன் கருதியும், பயணியர் நலன் கருதியும் அம்மாப்பேட்டை ஒன்றியத்தில் ஒரு பயணியர் விடுதி கட்டித்தர மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் வேண்டிக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மாப்பேட்டை ஒன்றியத்தில் பயணியர் மாளிகை இல்லை. எனவே அங்கு புதிய பயணியர் மாளிகை வேண்டுமென்ற கருத்தை இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதியான பாபநாசத்தில் பயணியர் மாளிகை இருக்கின்றது. பயணியர் அங்கே தங்கிக்கொள்ளலாம். ஒவ்வோர் ஆண்டும் குறிப்பிட்ட அளவில்தான் பகுதி இரண்டு திட்டத்தின்கீழ் பயணியர் விடுதி அறிவிக்கப்படுகின்றது. ஆகவே, பாபநாசம் பகுதியிலே பயணியர் மாளிகை இருக்கின்ற காரணத்தினால், அம்மாப்பேட்டையில் புதிதாக பயணியர் மாளிகை கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை என்பதை தங்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 302, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

302—

இ.எஸ்.ஐ. மருத்துவமனை

***6414—திரு. கே. தங்கவேல்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூரில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?